திருப்பூர் மாநகராட்சி, பலவஞ்சிபாளையம் குறும்பக்குட்டை பகுதியில் கனமழை காரணமாக வெள்ளநீர் தேங்கியுள்ள பகுதியினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட கண்காணிப்பு அலுவலர்/ தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் எல்.நிர்மல்ராஜ், மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர் மாநகராட்சி 4ஆம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், திருப்பூர் வடக்கு மாநகரச் செயலாளர் மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாநகராட்சி சுகாதார குழு தலைவர் கவிதா நேதாஜி கண்ணன் உள்பட கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. சிறப்புரை!

தஞ்சாவூர் அக்.21- தஞ்சை வடக்கு மாவட்ட அவசர செயற்குழு கூட்டம் கும்பகோணம் மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் க.நசீர்முகமது தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் செ.இராமலிங்கம், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் கோவி.அய்யாராசு, எஸ்.துரைமுருகன், ஜெயலெட்சுமி நடராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி கூட்டத்தின் தீர்மானங்களை விளக்கி, தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்டுள்ள தேர்தல் பார்வையாளர்கள் பாபநாசம் தொகுதி மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் பி.எம். ஆனந்த், கும்பகோணம் தொகுதி கே.மறைமலை தலைமைக் கழக வழக்கறிஞர், திருவிடைமருதூர் தொகுதி ந.செந்தில் மாநில இலக்கிய அணி புரவலர் ஆகியோரை அறிமுகபடுத்தி சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் கும்பகோணம் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா. தெட்சிணாமூர்த்தி, மாநில நிர்வாகிகள் ஆடுதுறை மு.உத்திராபதி, இராம. விஜயன் மற்றும் ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் கலந்துக்கொண்டனர்.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல்!

கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் அறிவுறுத்தல் படி 01.01.2025 தேதியை தகுதி பெற்படுத்தும் நாளாக கொண்டு சிறப்பு சுருக்க திருத்தம் 2025இன் கீழ் வாக்காளர் பட்டியல் தயாரிக்க ஏதுவாக 29.10.2024 அன்று புகைப்படத்துடன் கூடியவாக்காளர் பட்டியலை வெளியிட உள்ளது. அதுசமயம் வருகிற 29.10.2024 முதல் 28.11.2024 வரை புதிய வாக்காளர்களை சேர்க்கும் மற்றும் பெயர்கள் நீக்க திருத்த முகவரி மாற்றம் செய்ய தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட பாபநாசம், கும்பகோணம், திருவிடைமருதூர் ஆகிய மூன்று சட்டமன்ற தொகுதி வாரியாக சிறப்பு முகாம் 09.11.2024 மற்றும் 10.11.2024 சனி ஞாயிறு மற்றும் 23.11.2024 சனிக்கிழமை 24.11.2024 ஞாயிற்றுக்கிழமை ஆகிய நான்கு நாட்கள் சிறப்பு முகாம் நடைபெறுவதை பயன்படுத்தி 01.01.2025 அன்று 18 வயதை நிரம்பக் கூடிய புதிய வாக்காளர்களை சேர்த்தல், நீக்கல், முகவரி மாற்றம் செய்யவும், இறந்தவர்கள் பெயரை நீக்க தீவிரமாக பணியாற்ற வேண்டுமென கிளை கழக, வார்டு கழக செயலாளர்கள் வாக்குச் சாவடிமுகவர்கள் (BLA2) பூத்கமிட்டி உறுப்பினர்கள் BLC ஆகியோர் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ள ஏதுவாக ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் ஏற்பாடுகள் செய்திட வேண்டுமென இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் முகாம் நடைபெறும் நாட்களில் நமது கழகத்திற்கு ஆதரவாக புதிய வாக்காளர்கள் எவ்வளவு நபர்கள் சேர்க்கப்பட்டுள்ளது என்ற பட்டியலை மாவட்ட கழகத்தால் நியமிக்கப்பட்டுள்ள கண்காணிப்பு குழுவினர் தயார் செய்து வழங்குவதுடன் சிறப்பு முகாம் நடைபெறும் 5 நாட்களுக்கு முன்பு தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வாக்குச்சாடிகள் உள்ள பகுதிகளில் நேரில் சென்று BLA2 மற்றும் கிளை செயலாளர்கள் மூலம் புதியதாக திருமணமாகி வந்தவர்கள், 18 வயதுபூர்த்தியடைந்தவர்கள், புதியதாக முகவரி மாற்றிகுடி வந்த நபர்களை கண்டறிந்து அவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதற்கு உரிய ஏற்பாடுகளை செய்யவதுடன், முகாமில் அவர்கள் படிவம்வழங்கியவுடன், அதன்தொடர்நடவடிக்கைகளை கண்காணிப்பதுடன், அந்த பட்டியலை சம்பந்தப்பட்ட ஒன்றிய, பேரூர், பகுதி செயலாளர்களுக்கும், மாவட்ட கழக அலுவலகத்தில் ஒப்படைப்பதுஎன்றுதீர்மானிக்கப்படுகிறது.

குறிப்பு : வாக்காளர் சேர்த்தல் பணியினை BLA2 மற்றும் BLC இந்த பணியினை 2026 சட்டமன்ற தேர்தல்வரை தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள BLO உடன் இருந்து கண்காணிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட கழகத்தால் ஏற்கனவே மாநகர, ஒன்றிய, பேரூர்கழக செயலாளர்களுக்கு வழங்கப்பட்டு இருந்த BLC 100 வாக்காளர்களுக்கு 10 நபர்கள் போடப்பட்ட விபரம் மற்றும் மீதமுள்ள OMR படிவங்களை இதுவரை ஒப்படைக்காதவர்கள் உடனடியாக படிவங்களை பூர்த்தி செய்து ஒப்படைத்தும் ஏற்கனவே ஒப்படைத்த விவரங்களை அதற்கான பட்டியலில் பூர்த்தி செய்து வழங்குவதுடன் மேலும் OMR படிவங்கள் பொதுமக்கள் தாங்களாகவே முன்வந்து நமது கிளை செயலாளரிடம் கேட்பதாககூறியுள்ளனர். அவ்வாறு தேவைப்படின் அவர்களுக்கும் OMR படிவங்கள் வழங்கி அவர்களையும் இணைத்து பணியினை விரைவாக முடிக்கவேண்டும் என்று இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தொண்டர்களை போற்றும் இயக்கம்!

திராவிட முன்னேற்ற கழகம் என்பது கழக தொண்டர்களை போற்றி புகழகூடிய இயக்கம் என்பதை எடுத்துகாட்டுகிறவகையில் மாங்குடி வளையபேட்டையில் கழகஅடிமட்ட தொண்டர் மாங்குடிரத்தினம் அவர்களின் சிலையை முதலில் நமதுகழக இளந்தலைவர் இளைஞர் அணி செயலாளர் திறந்துவைத்து பின்பு இயக்கத்தின் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலையை திறந்து கலைஞர் கோட்டம் திறப்பதற்கு வருகை தந்தமைக்கு பாராட்டுகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பது என்று இக்கூட்டத்தின் வாயிலாக தீர்மானிக்கப்படுகிறது.

தலைவர் கலைஞர் அவர்களின்ச கோதரி சண்முகசுந்தரத்தம்மாள் மகனும் கழக தலைவர்தளபதி அவர்களின் சகோதரி செல்வி அவர்களின் கணவர் நீதிக்கட்சி தலைவர் நினைவை போற்றுகின்றவகையில் பன்னீர் செல்வம் என்கிற பெயரை கொண்ட முரசொலிசெல்வம் அவர்கள் திமுகவின்அறிவார்ந்த சொத்தாக 33 ஆண்டுகள் பத்திரிக்கையை நேசித்தவர். முரசொலிமாறன் மறைவிற்கு பிறகு முரசொலியில் பெட்டி செய்தியை மற்றும் சிலந்தி எனும் பெயரில் கட்டுரைகள் எழுதிவந்தார். கழக தோழர்கள் மட்டுமின்றி வாசகர்களின் கவனத்தை ஈர்த்து 1989 முதல் 1991ஆம் ஆண்டுவரை முரசொலி நாளேட்டை கவனித்துவந்தார். தலைசிறந்தபத்திரிக்கையாளராக விளங்கியவர். 1991ஆம் ஆண்டு முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ஆட்சியில் உரிமம் மீறல் பிரச்சனை தொடர்பாக சட்டமன்றத்தில் கூண்டில் ஏற்றிய பொழுது கூட அஞ்சாமல் கருப்பு உடை அணிந்து எதிர்த்துபோராடியவர் தலைவர்கலைஞர் அவர்கள் அவரது துணிச்சலை பாராட்டி செல்வம் கூண்டு கண்டேன் குதூகலம் கொண்டேன் என்ற தலைப்பில் கடிதம் எழுதிகலைஞர் அவர்களின் பாராட்டைபெற்றவர். பல தாக்குதல்களிலும் முரசொலிநாளிதழ் உடனடியாக வெளிவர துணையாக இருந்தவர், கழகத்தின் தலைவர்கலைஞர் அவர்களின் மறைவிற்கு பிறகு தளபதி அவர்கள் சாய்ந்து கொள்ள கொள்கை தூணாக திகழ்ந்த அறிவார்ந்த கழகத்தின் சொத்து முரசொலி செல்வம் மறைவிற்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவிப்பது என்று இக்கூட்டத்தின் வாயிலாக தீர்மானிக்கப்படுகிறது.

2021ம்ஆண்டுசேப்பாக்கம், திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதியில் வெற்றிபெற்று, அதனை தொடர்ந்து இளைஞர் நலன்மற்றும்விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சராக மிகசிறப்பாக பணியாற்றியும், நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் சூறாவளி சுற்றுப் பயணம் மேற்கொண்டு, அயராது உழைப்பும், தொண்டுள்ளம் கொண்டு 40 க்கு 40வெற்றி பெறுவதற்கு உறுதுணையாக இருந்த மாநில இளைஞர் அணிச் செயலாளர், இளந்தலைவர் அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களை துணை முதல்வராக பணி செய்ய வாய்ப்பு வழங்கியமைக்கும் மற்றும் தஞ்சை மாவட்டத்திற்கு நமது திருவிடைமருதூர் சட்டமன்ற உறுப்பினர், தலைமைசெயற்குழு உறுப்பினர் மாண்புமிகு முனைவர்.கோவி. செழியன் அவர்களை உயர் கல்வித்துறை அமைச்சராக தேர்வு செய்த கழகதலைவர், மாண்புமிகு தமிழக முதல்வர் தளபதி அவர்களுக்கு வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவிப்பது என்று இக்கூட்டத்தின் வாயிலாக தீர்மானிக்கப்படுகிறது.

திராவிடம் என்ற சொல்லை நீக்கி, தமிழ்த் தாய் வாழ்த்தைப் பாடுவது தமிழ்நாட்டின் சட்டத்தை மீறுவதாகும்!சட்டப்படி நடக்காமல், இஷ்டப்படி நடப்பவர் அந்தப் பதவி வகிக்கவே தகுதியற்றவர். இந்தியைக் கொண்டாடும் போர்வையில் நாட்டின் ஒருமைப்பாட்டையும் இந்த மண்ணில் வாழும் பல்வேறு இன மக்களையும் இழிவுபடுத்துகிறார் ஆளுநர்!திராவிட ஒவ்வாமையால் அவதிப்படும் ஆளுநர் அவர்கள், தேசிய கீதத்தில் வரும் திராவிடத்தையும் விட்டு விட்டுப் பாடச் சொல்வாரா? எனவேகழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கண்டனஅறிவிப்பின்படி தமிழ்நாட்டையும் தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளையும் வேண்டுமென்றே தொடர்ந்து அவமதித்து வரும் ஆளுநரை ஒன்றிய அரசு உடனடியாகத் திரும்ப பெற வேண்டுமென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

தமிழக ஆளுநர் ரவி அவர்கள் அவர் வெளியிட்ட அறிக்கையில் திராவிடம் என்ற சொல்லை நீக்கி தமிழ்த்தாய் வாழ்த்து பாடுவது தமிழ்நாட்டின் சட்டத்தை மீறுவதற்கு சமம். தமிழகமக்களின் உணர்வுகள், தாய்மார்களுக்குமதிப்பு அளிக்காமல் தமிழக மக்களின் உணர்வுகளை தொடர்ந்து இளிவுபடுத்தும் ஆளுநரை ஒன்றிய அரசு திரும்ப பெற வேண்டும். தேசிய கீதத்தில் உள்ள திராவிடம் என்ற வார்த்தையை ஆளுநர் எடுப்பாரா. இருமொழிக் கொள்கையை ஏற்றுக் கொண்ட ஒன்றிய அரசு தேசிய அளவில் இந்தி மொழி ஏற்கப்படாத பிறமொழிபேசும் மாநிலத்தில் உள்ள வானொலியில் இந்துமொழிவாரம் கொண்டாடும் அறிவிப்பையும் தமிழக முதல்வர் கண்டித்துள்ளார். கழக தலைவர் கண்டனத்தை முழுமையாக ஏற்றுக் கொண்டு தஞ்சை வடக்கு மாவட்ட செயற்குழுகூட்டத்தில் ஆளுநருக்கும், ஒன்றிய அரசுக்கும் கண்டனத்தை தெரிவித்துக்கொள்கிறது.

இவ்வாறு கூட்டத்தில் தீர்னங்கள் நிறைவேற்றப்பட்டது. கூட்ட முடிவில் மாவட்டக் கழக பொருளாளர் சஸ்தா நடராஜன் நன்றியுரையாற்றினார்.

திருப்பூர் மாநகராட்சி தனது 4வது மண்டல அலுவலகத்தில் மண்டல அளவிலான மாதாந்திர ஆய்வுக் கூட்டம் மண்டலக்குழுத் தலைவர், திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாநகராட்சி துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம் உள்பட மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி, கறம்பக்குடி தெற்கு ஒன்றியம், வெட்டன்விடுதி மற்றும் மழையூர் ஆகிய இரண்டு அரசு மேல்நிலைப் பள்ளிகளில் தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வித்துறையின் சார்பாக விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி மாணவர்களிடையே சிறப்புரையாற்றிய புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா. இந்நிகழ்வின் மாவட்ட அறங்காவல் குழு, தலைவர் தவபாஞ்சாலன், மாவட்ட கல்வி அலுவலர் ஜெயந்தி, கழக நிர்வாகிகள் என்.ஆர்.பரிமளம், ஊராட்சி மன்றத்தலைவர்கள் செந்தில் கலைச்செல்வி தர்மராஜ் பன்னீர், செழியன் காசிநாதன் ராமசாமி மதியழகன் மணிகண்டன், மணிக்கிளாஸ், முருகன் பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர்கள் மாரிமுத்து தங்கமுத்து உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் பள்ளி தலைமையாசிரியர்கள் ஆசிரிய பெருமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

அரியலூர் மாவட்டம் தா.பழூர் மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளராக பொறுப்பேற்றுள்ள ஒன்றிய குழு உறுப்பினர் ப.தனவேல் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கரைச் சந்தித்து வாழ்த்துப் பெற்று மாவட்ட கழக அலுவலகத்தில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதில் கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், மாவட்ட துணை செயலாளர் லதாபாலு, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், தலைமை கழக பேச்சாளர் இளஞ்செழியன், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் முருகானந்தம், மற்றும் மாவட்ட, ஒன்றிய, கழக நிர்வாகிகள், தா.பழூர் மேற்கு ஒன்றிய நிர்வாகிகளும் கலந்துகொண்டனர்.

மகளிர் சுய உதவிக்குழுக்கள் தயாரித்துள்ள பொருட்களின்

“மதி தீபாவளி பரிசுப் பெட்டகம்” விற்பனை துவக்கம்!

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் தகவல்!

சென்னை, அக்.20- தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் “மதி தீபாவளி பரிசு பெட்டகம்” விற்பனை துவக்கம் என அதன் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

அவரது அறிவிப்பு வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, குதமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்பட்டு வரும் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்திட பல்வேறு விற்பனை வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றின் தொடர்ச்சியாக விழாக்காலங்களுக்கு ஏற்ற வகையில் சுய உதவிக் குழுக்களின் தரமான தயாரிப்புப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

தீபாவளியினை முன்னிட்டு தற்போது சுவையயும் தரமும் நிறைந்த பல்வேறு இனிப்பு மற்றும் கார வகை தின்பண்டங்களைக் கொண்ட “மதி தீபாவளி பரிசுப் பெட்டகம்” (Mathi Diwali Gift Hampers) இணையதளம் மற்றும் கைபேசி எண் வாயிலாக மொத்தம் மற்றும் சிறிய அளவில் விற்பனை செய்யப்படுகிறது.

இந்தப் பரிசுப் பெட்டகத்தில், சிவப்பு அரிசி லட்டு, உலர்பழங்கள் லட்டு, கம்பு லட்டு, சோள லட்டு, ராகி லட்டு, கருப்புக் கவுனி லட்டு, கருப்பு உளுந்து லட்டு, நரிப்பயிர் லட்டு, தினை லட்டு, சாமை லட்டு மற்றும் ஆவாரம் பூ லட்டு ஆகிய லட்டு வகைகள், சாமை முறுக்கு, தேங்காய் பால் முறுக்கு, அரிசி முறுக்கு, கை முறுக்கு ஆகிய கார வகைகளும் 23.10.2024 வரை விற்பனை செய்யப்படுகிறது.

மேலும், தீபாவளிப் பண்டிகைக்கு பரிசளிக்க ஏற்ற வகையில் தஞ்சாவூர் தலையாட்டி பொம்மைகள், தஞ்சாவூர் ஓவியங்கள், மண்ணால் செய்யப்பட்ட விளக்குகள், கோரைப்புல்லில் செய்யப்பட்ட அலங்காரப் பொருட்கள் போன்றவையும் விற்பனை செய்யப்படுகின்றன.

தங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்கிட மற்றும் முன்பதிவு செய்திட “76038 99270“ என்ற கைப்பேசி எண்ணை அழைக்கவும்.

மேலும் தொடர்புக்கு மதி அனுபவ அங்காடி, அன்னை தெரசா மகளிர் வளாகம், வள்ளுவர் கோட்டம் அருகில், நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.

சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் தரமான பொருட்களை வாங்கி பயன்படுத்தி, சுய உதவிக் குழுக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவிடுமாறு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தலின்படி

சிறுபான்மையினருக்கான திட்டங்களை நல்ல முறையில் செயல்படுத்திடுவீர்!

ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிவுரை!

சென்னை, அக்.20- தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, சிறுபான்மையினர் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர், சிறுபான்மை யினர் நலன் குறித்த அறிவிப்புகள் மற்றும் இத்துறையின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து நேற்று (19.10.2024) தலைமைச் செயலகத்தில் ஆய்வு செய்தார்கள்.

இந்த ஆய்வு கூட்டத்தில் சிறுபான்மையினருக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை திட்டம், கிராமப்புற சிறுபான்மை மாணவியர்களுக்காக ஊக்கத் தொகை வழங்கும் திட்டம், சிறுபான்மையினர் பள்ளி / கல்லூரி விடுதிகள், விடுதிகளில் வழங்கப்படும் வசதிகள், முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம், கிறித்துவ மகளிர் உதவும் சங்கம், ஜெருசலேம் புனித பயணத்திற்கான நிதியதவி, சிறுபான்மையினருக்கு மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்கள் வழங்குவது, கிறித்துவ தேவாலயங்கள் பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தல், தொன்மையான தேவலாயங்கள் புனரமைத்தல், உலமாக்கள் மற்றும் இதரப் பணியாளர்கள் நல வாரியம், வக்ஃப் நிறுவனங்களில் பணியாற்றும் உலமாக்களுக்கு இரு சக்கர வாகனம் வாங்க மானியம் வழங்குதல், கிறித்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியர்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம், தமிழ்நாடு சிறு பான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் வழங்கப்படும் கடன் திட்டங்கள் பற்றிய விவரங்கள், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம், தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்படும் வக்ஃப் நிறுவனங்களுக்கு பெருமராமத்து மானியம் மற்றும் தமிழ்நாடு மாநில ஹஜ் குழு மூலம் தமிழ்நாடு ஹஜ் பயணிகளுக்கு ஹஜ் மானியம் வழங்குதல் ஆகிய திட்டங்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக நிர்வாகிகள் அவசர ஆலோசனை கூட்டத்தில் தெற்கு மாவட்ட கழக செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பேசினார். இதில் மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள்,பிற சார்பு அணி நிர்வாகிகள்,உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.